# இனிமை இல்லம்



குடும்பக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமை இல்லம்

| இல்லம் :- 7 | ஏப்ரல் – 2011 | இனிமை :- 6 |
|---|---|---|

## இறையியலின் பின்னணியில்
## இல்லங்களுக்கு இனிமை சேர்க்கும்
## ஒரு குடும்ப காலாண்டிதழ்.

தொகுப்பாசிரியர்:-

தா.பி.சுப்பிரமணியம்

**வெளியீடு:-**

**திருகோணமலை மறைக்கோட்ட**

**குடும்ப பணிக்குழு**

**மேய்ப்புப் பணி இல்லம்**

**உப்புவெளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இனிமை இல்லத்தின் வாசக நெஞ்சங்களுக்கு உத்தான தேவனின் இனிய நல்லாசிகள் உரித்தாகட்டும்!.**

முன்பு நத்தார் புதுவருட மலரில் உங்களோடு கரம்கோத்த நாம், தவக்காலத்தின் இறுதிவாரத்தில் கிறீஸ்துவின் பாடுகளில் தோய்ந்து நெஞ்சம் கனத்து நெக்குருகி, பின்னர் அவரது உயிர்ப்பின் மூலம் கன்ம பாவத்தினின்றும் மீண்டும் புதிதாய் பிறப்பெய்தியுள்ளோம், அம்மகிழ்வை இம்மலர் மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக மகிழ்ச்சியடைகின்றோம்!.

எமது பாவங்கள் பரமனை பரகதியிலிருந்து பூமிக்கு இட்டு வந்தன. அதே பாவங்களின் கொடுமை, உலக இரட்சணியத்தை பாரச்சிலுவை சுமக்க வைத்து, அதே சிலுவையில் மூன்றாணிகளில் தொங்க வைத்தது. அன்புக்காக, நட்புக்காக உயிரைக் கொடுப்பதை விடவும், தன் மந்தைகளுக்காக மேய்ப்போன் உயிர் துறப்பதை விடவும் மேலான தியாகம் உண்டா?.

அரிதினுமரிதான இந்த உயர்ந்த பலியை நாம் எவ்விதம் பயன் படுத்திக் கொண்டோம்? அல்லது இப்பலியின் நோக்கத்தை நாம் எவ்விதம் புரிந்து கொண்டோம்? அப்பலியாலும் உயிர்ப்பாலும் பெற்ற தேவநேயம் எமது உள்ளங்களில் குடி கொண்டுள்ளதா? அந்த நேயத்தை நாம் எவ்விதம் பிரதிபலிக்கிறோம்? அல்லலுறும் அடுத்தவனை அரவணைப்பதன் மூலம் தேவநேயமாம் மனித நேயத்தை பிரதிபலிக்கிறோமா?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இல்லங்களுக்கு இனிமை சேர்க்கும் விதத்தில் கணவன் மனைவியிடமும், பெற்றோர் பிள்ளைகளிடமும் மூத்துத்தளர்ந்த முதியவர்களிடமும் அன்பைப் பொழிகின்றோமா? பாசத்தைக் கொட்டுகிறோமா? சிலுவைப் பலியினதும் உயிர்ப்பினதும் எதிரொலி, எந்த விதத்தில், எந்த வடிவில் எம் மத்தியில் உலவுகிறது? பயன்தருகின்றது? .

சிலுவைப்பலியின் பலன், உத்தானத்தின் மகிமை, எம் மத்தியில் பாவங்களைக் களைவதாக, சுமைகளை இறக்கி இளைப்பாற்றுவதாக, தன்னலமற்ற அன்பால் ஒருவரையொருவர் பிணைப்பதாக இருக்கட்டும்!

இந்நோக்கங்களுக்காக செயற்படுவதாக சங்கற்பம் பூண்டுள்ள உங்கள் மீது இறையாசீர் பொழியப்படுவதாக!

**இறை அன்பில்**
**அருட்பணி அன்ரனி லீயோ அடிகளார்**
**இணைப்பாளர்**

**குடும்ப வாழ்வு பணித்துறை,**
**மேய்ப்புப்பணி நிலையம், உப்புவெளி,**
**திருகோணமலை.**
**24.04.2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் என்பது கோயில்

"குடும்பம்" என்பது அன்பின் உறைவிடம். உறவுகளின் சங்கமம். பயிற்சித்தளம், சமுதாயத்தின் ஆணிவேர். குடும்பம் சிறப்புற்றால் அதன் மூலம் குவலயமே சிறப்புறும். எமதுள்ளங்களில் "உலகமே ஒரு கட்டுக்கோப்பான குடும்பம்" என்ற நிலைப்பாடு உதயமாக வேண்டும். எமது குடும்பம் மட்டுமல்ல, இந்த நானிலத்தில் உள்ள அத்தனை குடும்பங்களும் இறையருள் கொண்டவையாகவே இருக்கின்றன என்ற தத்துவத்தை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அன்புடைய இரு நெஞ்சங்களின் இதயக்கலப்பினிலே இயல்பாகவே உருவாகுவது உலகம் ஆகும். இதில் அருள் நிகழ்வாக அமையும் அனைத்தினின்றும் உயிரான உறவுகள் உதயமாகின்றன.

மனிதவரலாறு கண்ட மகத்தான நாகரீகமே குடும்பம் ஆகும். சமயத்தத்துவங்கள் குடும்பம் என்பதை ஒரு கோயிலாக குலவிளக்காக—குட்டித் திருச்சபையாக சித்தரித்துக்காட்டுகின்றன.

இருமனம் கொண்ட இருவர் ஒரு மனத்தவராகி, இணைந்து ஒருவருக்கொருவர் நிலையான அன்பைச்செலுத்தி – அந்த அன்பின் நிறைவு அடையாளமாக மக்களைப் பெற்று, அம்மக்களை நிறைவான திருச்சபையின் கனிகளாக வளர்ப்பதன் மூலமே குடும்பம் சிறப்பானதாக அமைய முடியும்.

குடும்ப வாழ்வும் இறைவனின் ஓர் அழைத்தலே ஆகும் என்பதை குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உணர வேண்டும். அந்த அழைத்தலுக்கேற்ப தத்தமது கடமைகளை கடைசிவரை செய்து வரவேண்டும்.

நன்மை, தீமை, இன்பம், துன்பம் எதுவாயினும் உடைத்தெறியாமல் உடன்பட்டு வாழும் ஓர் அமைப்பே 'திருமணம்' என்பதை அனைவரும் உணர வேண்டும். இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்புச்சமூகம்' என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் எடுத்துக் கூறுகிறது.

குடும்பத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் கைக்கொள்ள வேண்டிய பண்புகளைப்பற்றிக் கூற வந்த புனித சின்னப்பர், அதில் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அன்புக்குரிய இறைமக்கள் ஆவீர்கள். எனவே அதற்கு வேண்டிய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்ச்சி, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள்". புனித சின்னப்பரின் கூற்றின்படி ஒவ்வொருவரும் மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கட்டாயம் கொண்டிருப்பது அவசியமாகும்.

நமது குடும்பங்களுக்கு முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாக விளங்குபவர் அன்னை மரியாளாவர். அன்பு, பாசம், இரக்கம், பொறுமை, என்பவற்றைக் கைக் கொண்டு நிலையான குடும்பத்தைக் கட்டி எழுப்ப வேண்டியவர்களில் முக்கியமானவர்கள் பெண்களே!.

சிறந்த சிற்பிகளாக பெண்கள் தங்களுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து அன்பு – சமாதானம் - பொறுமை - ஒழுக்கம் போன்ற நல்லமதிப்பீடுகளை "குடும்பம்" என்ற நிலத்தில் விதைத்து அதனை உரமூட்டிப்பராமரித்து வளர்த்து நல்லபயனைப்பெற முயற்சிப்பதே நல்லதொரு குடும்பத்தின் கடமையாகும்.

'அன்பே குடும்பவாழ்விற்கு அடித்தளமும் ஆணிவேருமாகும்.'

– (எபேசியா 3:14).

-எப்.எஸ்.ஆஞ்சலீன் -



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இறைவனுக்குத் தோத்திரம்

தேவமாதா ஆலயத்தில் வழமையான ஞாயிற்றுக்கிழமை பூசைநடந்து முடிந்தது. செபமாலை, ஞாயிறு தோறும் பூசை காணத்தவறாதவர். மிகுந்த தெய்வ பக்தி உள்ளவர். பூசை முடிந்து, "சென்றுவாருங்கள் பூசை முடிந்தது என்று குருவானவர் சொன்னாலும் அவர் போகமாட்டார். ஒவ்வொரு சொரூபத்தையும் தொட்டுவணங்கி பிராத்தனை செய்து விட்டுத்தான் போவார்!

வரும்போது பிள்ளைகள் மூவரோடும்தான் வந்தார். பூசைப்பலிமுடிந்ததும் செபம்படிக்க வேண்டும். கிறிஸ்தவ பாடபோதனை நடக்கும். பிள்ளைகளை வேதம் படிக்க விட்டு விட்டு அவர்மட்டும் தனியாக வீட்டுக்குப் போனார்.

குடும்ப சமேதரராகத்தான் கோவிலுக்கு வந்து கொண்டிருந்தவர், ஏனோ, அந்த வழக்கம் இடையில் சிலகாலம் நின்றுவிட்டது குறித்து இவருக்கு பெரிய மனத்தாக்கம்! பூசைகண்டும் சாப்பிட்டுவிட்டு தண்ணீர்குடிக்காதது போல!

எப்படியும் மனைவியையும் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு வரவேண்டும்! அதற்கு என்னவழி? என்ற சிந்தனையோடு வீட்டுப்படி ஏறினார் செபமாலை. லூர்த்துமேரி சாப்பாட்டுக் கோப்பையை நீட்டினாள். "இண்டைக்குப் புட்டும் பலாப்பழமும் வைச்சிருக்கிறன் உங்களுக்கு பிடிக்குமெண்டு, சாப்பிடுங்கோ!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ கோவிலுக்கு வராததுக்கு ஒரு முடிவு தெரியாம இதச்சாப்பிடமாட்டன்!"

"இதென்ன புதுக்கதை! நான் ஏன் பூசைக்கு போறதில்லை எண்டு உங்களுக்குத் தெரியும்தானே? இருந்த ஒரேயொரு சங்கிலியையும் வித்துபோட்டீங்கள்! நகைநட்டு இல்லாமல் பொம்புளைகள் வெளியால வெளிக்கிட ஏலுமே?!

"வேதக்காரர் எண்டு இருக்கிற நாங்கள் ஞாயிற்றுக்கிழமைப் பூசையும் இல்லாமல் இருக்கிறது மட்டும் சரியோ? ஆண்டவர் அருள் கிடைக்காமல் இருந்தால் இன்னும் கஷ்டங்கள் எல்லே கூடும்.? அவர் கிருபை கிடைச்சால் அல்லோ பிடிச்ச சனியன் துலையும்.?

"நான் வீட்டில படத்துக்கு முன்னால இருந்து மன்றாடுற நான் தானே!"....

"எண்டாலும் பூசைப்பலி கண்டு எல்லாரோடையும் சேர்ந்து பிரார்த்திக்கறது போல வருமா?."

"எனக்குத் தெரியாது, நான் சங்கிலியில்லாமல் கோவிலுக்கு வரமாட்டன்".

செபமாலையின் குடும்பம் வாடகை வீட்டில் தான் குடியிருந்தது. கஷ்ட நிலைமையால் ஒருவருடத்துக்கும் மேலாக குடிக் கூலி காட்டாமல் விட்டுவிட்டார்கள்! வீட்டுக்காரன், முழுக்காசையும் கட்டு! இல்லாவிட்டால் வீட்டை விடு! என்று சண்டைபிடித்ததனால் வேறு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வழியில்லாமல்தான் சங்கிலியை விற்க வேண்டியதாயிற்று! நான் உனக்குச்சங்கிலி செய்து தருவேன் என்று வாக்குறுதி கொடுத்தும், தன்னை ஒறுத்து நடந்தும், அவரால் நிறைவேற்ற முடியாமல் போயிற்று! கடையொன்றில் சிப்பந்தியாக குறைந்த சம்பளத்தில் பணியாற்றும் அவரால் எப்படி தன் பத்தினிக்கு சங்கிலி வாங்கமுடியும்.?

சாப்பிடாமல் அவர் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்த வேளை, பிள்ளைகள் மூவரும் வந்து சேர்ந்தனர். மூத்தவன் முன்னேவந்து ஒருகைப்பையை அம்மாவிடம் கொடுத்தான்.

"அம்மா நான் கோயிலால வரக்குள்ள இந்தப்பை பத்தைக்குள்ள கிடந்தது. எடுத்துக் கொண்டு வந்தன். வடிவானபையம்மா உனக்கு வடிவாயிருக்கும்!".

லூர்த்துமேரி அந்தப்பையை வாங்கிப்பார்த்தாள். உண்மையில் அழகாய்த் தான் இருந்தது!. சுருக்கை இழுத்து திறந்து பார்த்தாள். திகைத்துப்போனாள்! சங்கிலியொன்று ஜொலித்து அவளைப்பார்த்துச் சிரித்தது! அவள் சொக்கிப் போனாள்! "பார்த்தீர்களா எங்கள் எல்லாருடைய வேண்டுதல் மன்றாட்டு எல்லாம் பலித்துவிட்டது. கடவுளாப்பார்த்துக் கொடுத்திருக்கிறார்!"

செபமாலை எழுந்து வந்து பையை வாங்கி துழாவிப்பார்த்தார். சில பணநோட்டுக்கள் தெரிந்தன. சில கடதாசிகள் - ஆவணங்களாக இருக்கலாம் - அவையும் இருந்தன கூடவே ஒரு அடையாள அட்டையும் இருந்தது! செபமாலை சொன்னார்: "இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவச் சொத்து. இதை பறிகொடுத்தவர்கள் எப்படியெல்லாம் பதறிக்கொண்டிருப்பார்களோ தெரியாது? இதை அவங்களிட்டக் கொண்டுபோய் சேர்த்தால்தான் எங்களுக்கு கடவுள்ற ஆசீர்வாதம் கிடைக்கும்".

"பைத்தியக் கதை கதைக்காதேயுங்கோ! நாங்கள் படுகிற கஸ்ரத்தப்பார்த்து, தேவன் குடுத்தத வீணாக்காதீங்க!"

"இதுதான் கோயிலுக்கு வரவேணும் பூசை காணவேணும். பிரசங்கம் கேட்க வேணும் எண்டு சொல்லுறது! போன கிழமை சுவாமி பிரசங்கத்தில் என்ன தெரியுமா சொன்னவர்: "செபதபம் செய்தால் மட்டும் போதாது ஆண்டவர் காட்டின வழியில வாழ்ந்தால்த்தான் அவர் உதவி கிடைக்கும் எண்டு சொன்னவர்!"

"சங்கிலியமட்டும், விட்டுப்போட்டு மற்றதுகளை எல்லாம் பார்சல்ல அனுப்பிவிடுங்கோவன்!"

இனி இவளோடு கதைப்பதில் பிரயோசனம் இல்லை என்று முடிவெடுத்த அவர், எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு அறிமுக அட்டையில் இருக்கும் முகவரியைத் தேடிப்போனார்!.

அந்த வீடு மிகப்பிரமாண்டமானதாயிருந்தது! அழைப்பு மணியை அழுத்தினார். கம்பீரமான தோற்றத்தோடு ஒருவர் முன்னேவந்து நின்றார்! செபமாலை, "யோன்பிள்ளை என்பது யார்? நீங்களா?" என்று கேட்டார்.

"ஆம் நான்தான்! ஏன்? என்ன விசயம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபமாலை ஒன்றும் பேசாது கைப்பையை நீட்டினார். யோன்பிள்ளை பையைக் கண்டதுமே புன்னகைத்தார். திறந்து பாாத்ததும் மேலும் அகமகிழ்ந்தார்!. "இதை இழந்ததில் இருந்து நான் நிம்மதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்தேன்! "இன்று முழுவதும் தின்னாமல் குடிக்காமல் இருந்தேன்! கடவுள் உங்கள் உருவில் வந்து என்னைக் காப்பாற்றினார்!" என்று கூறிய அவர், "இந்தச் சங்கிலியல்ல பிரதானம், என்னுடைய உத்தியோக அட்டை, முக்கியமான ஆவணங்கள் இல்லாமல் நான் ஒன்றும் செய்யமுடியாது!. எல்லாவற்றையும் அப்படியே பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்தீர்களே" என்றார்.

செபமாலையை அமரச்செய்து உபசரித்து ஆறஅமற அவரைப்பற்றி விசாரித்தார். அவர் நிலையை நன்கு உணர்ந்து கொண்டார்!.

"நான் வெளிநாட்டு நிறுவனமொன்றின் பொறுப்பாளராக இருக்கிறேன்! திறமையான பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் நேர்மையான தொழிலாளிகளுக்குத்தான் தட்டுப்பாடு! உம்மைப்போல நேர்மையான ஊழியன்தான் எனக்கு முக்கிய தேவை! எங்கள் நிறுவனத்தில் உம்மை முக்கிய மேற்பார்வை யாளனாக நியமிக்கிறேன்! இந்த சங்கிலியையும் காசையும் நீரே வைத்துக்கொள்ளும் "என்றார்.

செபமாலையால் நம்பவே முடியவில்லை. அப்படியே மேனி புல்லரித்துப்போய் இறைவனுக்குத் தோத்திரம் சொன்னார்.

-சூசை எட்வேட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பு உணர்த்தும் செய்தி!

யாரும் அப்பாவாக வேண்டும், அம்மாவாக வேண்டும் என்று கல்யாணம் முடிப்பதில்லை! தங்கள் தங்கள் ஆசாபாசங்களை தீர்த்துக்கொள்ளும் சுயநலநோக்கோடுதான் ஆணும் பெண்ணும் சேர்கின்றனர்! தங்கள் உணர்ச்சிகள் தீர்ந்தபின்னர், பிள்ளையாம் குட்டியாம் கடமையாம் கௌரவமாமென எப்படி எப்படியோ வளர்கின்றனர்! " வந்தது தெரியும் போவது எங்கே, வாசல் நமக்கே தெரியாது என்ற நிலையில் இலக்கற்று வாழ்கின்றனர்!. எதிர்பார்த்து வந்தது என்னவோ, எதிர்பாராமல் மாட்டிக் கொண்டு முழிப்பது வேறென்னவோ என்று வாழ்வில் விரக்தியுற்று, துன்பச் சேற்றில் சிக்கி, 'ஆண்டவா என்னை காப்பாற்று' என்று இறைவனிடம் கையேந்துகின்றனர்.!

"இறைவன் சிரிக்கின்றான், பாவம் மனிதன் என்று!

'இவற்றில் இருந்து நாம் ஒரு பெரிய உண்மையை உணர்ந்து கொள்ளலாம்: குடும்பமாக இருந்தாலென்ன, கூட்டுறவாக இருந்தாலென்ன, கட்சி அரசியலாக ஆனால் என்ன, எல்லோரும் ஒருவரை ஒருவர் தேடுவது தங்கள் தங்கள் சுய நல தேவைகளை, சுயலாபங்களை அடைந்து கொள்வதற்காகத்தான்! மற்றவர் நலனுக்காக தியாகம் புரிய யாரும் தயாராயில்லை! உலகத்தில் பிரச்சினையே இதுதான்.

இப்படியாக உலகம் இயங்கிக் கொண்டிருக்கையில்தான் பிதாவானவர் தன் குமாரனையே மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்க அனுப்பிவைத்தார்! அவருக்கு இயேசு என்றும் பெயரிட்டார். உலகத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினாலும் அவர்களிடம் குறைகள் இருப்பதை அவர்களே ஒத்துக் கொண்டிருக்கின்றனர்! தவிர, இயேசுநாதர் மட்டும்தான், நான் விண்ணில் இருந்து வந்தவன், வானத்தையும் பூமியையும் படைத்த உண்மையான கடவுளின் மகன் என்று உறுதியாச் சொன்ன ஒரே ஒருவர்! அவரின் போதனைகள், சாதனைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்திய அற்புதங்கள்............எல்லாமே அவர் மண்ணில் இறங்கி வந்த தேவன் என்பதற்குச் சாட்சியம் சொல்லும்!

சுமை சுமந்து செல்கிறான் ஒருவன், அவன் பின்னால் வருகிறான் இன்னொருவன். அப்பா இந்தப்பொதியை சுமக்க இயலவில்லை எனக்காக கொஞ்சநேரம் சுமந்துவருகிறாயா என்றால் அவன் சம்மதிப்பானா? எவனுமே சம்மதியான் நீதிமன்றத்திலே ஒருவனுக்குத் தீர்ப்பிடப்படுகிறது, கடூழியச்சிறைத்தண்டனை என்று! அவனுக்காக பரிதாபப்பட்டு கூடிப் பிறந்தவனும் அத்தண்டனை ஏற்பானா? ஒருவர் நலனில் குளிர்காய இன்னொருவர் அலையும் உலகில், யார்தான் இன்னொருவர் துன்பத்தை ஏற்க முன்வருவார்?

ஆனால் நமது ஆண்டவர் இயேசு மட்டும் தான் நம்மெல்லோருடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்க முன்வந்தார்! அந்த பயங்கர தண்டனையை மனமுவந்து ஏற்றார்! தண்டனையை தாம் ஏற்று எம்மை மீட்டு பூரிப்படைந்தார்!. நமக்குவரும் நோய் துன்பங்களுக்கெல்லாம் என்ன காரணம்? நாம் செய்த பாவங்களுக்குக் கூலியாகத்தான் நமக்கு நோயும் துன்பமும் அவஸ்தைகளும் அபகீர்த்திகளும் ஏற்படுகின்றன!

நமக்கு பாவ மன்னிப்புத்தர தன்னையே அர்ப்பணித்த நம் ஆண்டவர் இயேசுவை எப்போதும் நம் இதயபீடத்தில் இருத்திக் கொண்டால் போதும். அவரை முழுமனதோடு நம்பினால் போதும், எந்தத் துன்பமும் நம்மை அண்டாமல் போகும். இது சர்வநிச்சயம்! நிதர்சன உண்மை! இதைத்தான் ஆண்டுதோறும் வரும் தவக்காலம் எமக்கு உணர்த்துகிறது!.

மரணித்த ஆண்டவர் இயேசு, மூன்றாம் நாளில் உயிர்பெற்றார்! அவர் எத்தனையோ மரித்தவர்களை உயிர்பெறச்செய்தார்! தானும் உயிர்பெற்று எழுந்தார்!. உயிர்பெற்று எழுந்ததன் மூலம் மிகப்பெரிய நம்பிக்கையையும் உண்மையையும் எமக்கு உணர்த்துகிறார் அது என்னவென்று பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் இந்த மண்ணுலக வாழ்வோடு எல்லாம் முடிந்து போய்விட்டது, அதன் பின் வேறு ஒரு வாழ்வே இல்லை என்றே எண்ணிவாழ்கின்றனர். அதனால் மனம் போனபடி வாழ்கின்றனர்! அடுத்தவனுக்குக் கெடுதி மனம் கூசாமல் செய்கின்றனர்!. என்ன கஷ்டப்பட்டாலும் இன்பங்களை அடைய முன்நிற்கின்றனர்! என்ன பாவங்களைச் செய்தென்றாலும் சொத்துக்களைச் சேர்த்து தங்கள் வாரிசுகளுக்கு விட்டுச், செல்வதில் குறியாயிருக்கின்றனர்!.

ஆண்டவர் உயிர்பெற்றெழுந்து விண்ணகம் மீண்டதன் மூலம், இவ்வுலக வாழ்வு நிரந்தரம் அல்ல, இறந்த அனைவருக்கும் உயிர்ப்பு உண்டு, மறு உலகவாழ்வு உண்டு! மண்ணுலகில் செய்த பாவங்களுக்கு சரியான நியாயத்தீர்ப்பும், புண்ணிய கருமங்களுக்கு ஏற்ற நித்திய நல்வாழ்வும் விண்ணகத்தில், மறுவாழ்வில் கிடைக்குமென்று காட்டியிருக்கிறார்!.

!ஒருவரது பாவங்களை நாம் மன்னித்ததால்தான் தேவன் நமது குற்றங்களையும் மன்னிப்பார் என்று உணர்ந்து நாம் குடும்பத்துள்ளும் அயல்குடும்பங்களிலும் ஒருவர் பிழையை மற்றவர் பொறுத்து வாழ்வோம். அன்பாக, ஒற்றுமையாக, அன்னியோன்னியமாக வாழ்ந்து இனிமை இல்லங்களிலே சமாதானம் ஓங்கச் செய்வோம்!.

ஆக்கம்
- ஆனந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்காகத்தான்.................

அது ஒரு சிறைச்சாலை.

நூற்றுக்கணக்கான கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். நாளை தூக்கில் தொங்க இருக்கும் கைதி அவன். அதை எண்ணி எண்ணி நேற்று முழுவதும் நித்திரையே இல்லை. முழங்காலை மடித்துக் குந்திக் கொண்டிருந்தவனின் காதில் தூரத்தில் எங்கேயோ பலர் கூச்சலிடும் சத்தம் வந்து மோதுகிறது.

"அவனைக் கொல்லுங்கள்......!அவனைக் கொல்லுங்கள்...! சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்...........!"

அவன் மேனி சிலிர்க்கிறது.
"சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்........"
அதனைக் கற்பனைப் பண்ணிப் பார்க்கிறான்.
அக்காலத்திற்குரிய மரண தண்டனை என்பது அதுதான்.

குற்றவாளியின் தோளில் அவன் மரிக்க வேண்டிய சிலுவையைச் சுமத்துவார்கள். தண்டனை நிறைவேற்ற வேண்டிய இடம் மட்டும் அவன் அந்தச் சிலுவையைச் சுமந்து கொண்டு செல்ல வேண்டும். பாரம் தாங்காமல் எங்கேயேனும் சறுக்கி விழுந்தால்...... கூட வரும் போர் வீரர்கள் சவுக்கினால் அடிப்பார்கள்.

சிலுவை மரணம் எத்தனை பயங்கரமானது என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். சிலுவை மரணத்திற்கு ஒருவன் தீர்ப்பிடப்பட்டதும், அரசாங்கப் போர் வீரர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் தங்கள் இஷ்டம் போல் அடித்துத் துன்புறுத்துவார்கள். அவன் அதனால் வேதனைப் படுவதைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்.

அவனை அவமானப்படுத்தி, இரத்தம் வடிய வடிய வேதனைப் படுத்திய பின் அவன் மீது ஒரு பாரமுள்ள மரச் சிலுவையை வைத்து, சிலுவையில் அறைய வேண்டிய இடம் மட்டும் சுமந்து செல்ல அடிப்பார்கள். அங்கே சென்றதும் அவனது உடைகளைக் கழற்றி விட்டு, அவன் சுமந்து வந்த சிலுவையின் மீது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவனைக் கிடத்தி, சுமார் 16 அங்குல ஆணிகளை எடுத்து அவன் கைகளையும், கால்களையும் சிலுவையோடு சேர்த்து ஆணி அடிப்பார்கள். இரத்தம் பீறிட்டுப் பாயும்.

அவன் வேதனை தாங்கமாட்டாமல் கதறுவான். பின்பு மக்கள் பார்க்கக் கூடியதாக அந்தச் சிலுவையை நிமிர்த்தி மண்ணில் நாட்டி விடுவார்கள்.

'பயங்கரமான வெயிலின் கொடுமை, அவனுடைய காயங்களைத் தாக்கும் போது ஏற்படுகின்ற எரிச்சல் வேதனை ஒருபுறம்..... மக்களின் பரிசாக நிந்தனைச் சொற்கள் மறுபுறம்....

இரண்டுக்கும் நடுவாக மனம் நொந்து அவன் உயிரை விடுவான்....இப்படியான இந்த பயங்கரமான சிலுவை மரணத்தைக் குறித்து கைதி கலங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது,

சிறைச்சாலைக் கதவு திறக்கப்பட்டது. அங்கு வந்த அதிகாரி சொன்னார்." உனக்கு விடுதலை! உன்னுடைய இடத்திற்கு இன்னொருவரைப் பிடித்து விட்டோம். அவர் உனக்காக மரிக்கப் போகிறார்......" என்றார்.

அவனால் அந்தச் செய்தியை நம்பமுடியவில்லை...... பயந்தான்.... உடனேயே சிறைச் சாலையை விட்டு வெளியேறினான். கும்பலாகச் சென்று கொண்டிருந்த மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டான். 'கபால ஸ்தலம்' என்று சொல்லக் கூடிய 'கொல்கொதா' என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

அங்கே...

மூன்று பேர் சிலுவை மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தார்கள். இரண்டு பக்கமும் நாட்டப்பட்டிருந்த சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தவர்களை அவன் அடையாளம் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். அவர்கள் இருவரும் பலவிதமான கொலை கொள்ளைகளில் தன்னோடு ஒன்றாகப் பங்கு கொண்டவர்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

ஆனால்....நடுவில் தொங்கும் இவன் யார்?

உற்றுநோக்கினான். "நசரேனுவாகிய யேசு யூதர்களின் ராஜா" என்று தலைக்கு மேல் ஒரு பலகையில் எழுதப்பட்டிருந்தது.

"ஒரு வேளை இதுதான், எனக்காகச் செய்யப்பட்ட சிலுவையாக இருக்குமோ?.

இப்படிச் சிந்தித்து சிலுவையில் தொங்கும் இயேசுவை உற்றுப்பார்த்தான். அவனது உள்ளத்தின் ஆழத்தில் 'அவர்' பேசுவதைப் போல் உணர்ந்தான்.

"பரபாஸ்.....! உன்னுடைய இடத்தில் நான்......"
"நீ தொங்க வேண்டிய இடத்தில் நான்...."
"நீ வேதனைப் படவேண்டிய இடத்தில் நான்..."
"நீ மரிக்க வேண்டிய இடத்தில் நான்....."

ஆம்! அன்பர்களே! நண்பர்களே!

சிலுவையில் தொங்கும் யேசு இன்று உன்னைப் பார்த்து, என்னைப் பார்த்துச் சொல்கிறார்...

"உன்னுடைய இடத்தில் நான்"

உன்னுடைய கைகள் செய்த பாவத்திற்கு உன்னுடைய கைகளில் அறையப்பட வேண்டிய ஆணி என்னுடைய கரங்களில் அறையப்பட்டிருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உன்னுடைய கைககள் செய்த பாவத்திற்கு, உன்னுடைய கால்களில் அறையப்பட வேண்டிய ஆணி என்னுடைய கால்களில் அறையப்பட்டிருக்கிறது.

“நீ யோசித்துச் செய்த பாவத்திற்காக உன்னுடைய தலையில் சூடப்பட வேண்டிய முள்முடி என்னுடைய தலையில் சூட்டப்பட்டிருக்கிறது”!

“உன்னுடைய இருதயத்தால் சிந்தித்து செய்த பாவத்திற்காக உன்னுடைய இருதயத்தைப் பிளக்க வேண்டிய ஈட்டி ஏ்னனுடைய இருதயத்தைப் பிளந்திருக்கிறது”

வானத்தையும் பூமியையும் படைத்து அவற்றை ஆளுகை செய்கிற சர்வவல்ல பிதாவினுடைய வலது பக்கத்தில் செல்லப் பிள்ளையாக இருந்த அவர் எதற்காகப் பாடுபட்டார்?

நம்மால் ஒரு சிறு குண்டூசி குத்தினால் கூட தாங்க முடிவதில்லை. ஆனால் ஆண்டவர் இத்தனை பெரிய ஆணிகளை ஏற்றுக் கொண்டாரே! எதற்காக......? இவை யாவும் நமக்காக – நம் இரட்சிப்பிற்காக – நம் பாவ மன்னிப்பிற்காக – நாம் பரலோகம் செல்ல....

ஆம்! ஆண்டவர் எம்மீது வைத்த அன்பினால், தன்னையே பலியாகக் கொடுத்தார்.

இதனை இன்றைக்காவது உணர்ந்து - இந்த அன்பினை ஏற்றுக் கொண்டு பாவத்தை விட்டுவிட்டு மனந்திரும்பி அவரண்டை ஓடிவரத் தயாரா? அவர் சிலுவையண்டை வந்து நம் பாவங்களை அறிக்கையிடும் போது அவர், பரிசுத்த இரத்தத்தினால் நம்மைக் கழுவி பரிசுத்தப்படுத்தி தம் பிள்ளையாக நம்மை அரவணைத்துக் கொள்வார்”

(ரோமா 510; கலா 3:13, எபே 117)

- சு.பிதா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் விசுவாசத்தின் உயிர்ப்பு கூறும் நல் வாழ்த்துக்கள்!



சிலுவைப் பலி மூலம்
அடைந்த இரட்சிப்பினதும்
மரணத்தை வென்ற
மகத்தான உயிர்ப்பினதும்
மாண்பினை உங்களோடு
பகிர்ந்து கொள்வதில்
பேருவகை கொள்கிறோம்!
அல்லேலூயா!

குடும்ப வாழ்வு பணித்துறைக் குழு,
மேய்ப்புப்பணி நிலையம்,
உப்புவெளி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிமை இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org